முருகப்பெருமான் துணை

**மகான் திருமழிசையாழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.04.2023, செவ்வாய்க்கிழமை

1. அவதார ஞானியே அரங்கா
   அன்னதானப் பெருமை உணர்த்தி
   அவணி காக்கும் அம்சமாக
   அற்புதம் நிகழ்த்தும் தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   ஆசிபெற்று உன்வழி மக்கள்வர
   ஆற்றல்பட சுபகிருது சேல்திங்கள்
3. திங்களிலே முவேழுதிகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 21 ம் நாள் 04.04.2023, செவ்வாய்க்கிழமை)
   தொண்டர்கள் நிலையுயர உரைப்பேன்
   ஓங்காரக் குடில்நோக்கி வருவோர்
   உயருவரென திருமழிசையாழ்வாரும் உரைப்பேன்
4. உரைக்கவே மெய்ஞானவழி தேடி
   உலகமெல்லாம் அலைவதை விட்டு
   மறைபோற்றும் ஞானதேசிகன்
   மாதவசி அரங்கன் குடிலை அணுகி
5. அணுகி முழுமதி காலமெல்லாம்
   அரங்கமகான் தருமம் ஏற்று
   ஞானதீட்சை ஏற்று வருக
   ஞானபலம் சிறப்பறிவு கூடி
6. கூடியே உலகோர் சிறப்பர்
   குருவருள் தீட்சை ஏற்று
   நாடியே உண்மை சீடர்களாக
   ஞானம் தேறிவரும் தொண்டர்கள்

7. தொண்டர்கள் அரங்கன் சக்தியாக
தேடிவரும் உயர் மாந்தர்கள்
உண்டான அவர்களை மதித்து
உதவிபட அரங்கன் தருமத்தை
8. தருமத்தை காக்கும் வண்ணம்
தரணியோர் இணைந்து வர
கருமத்தை வெல்லும் பலமும்
கடைநாளும் குருவருள் துணைபட
9. துணைபட வாழும் பலமும்
தொண்டர்களுள் தொண்டராக
இணைந்திட எல்லா வளமும்
இனி பிறவா தன்மையும் கிட்டி
10. கிட்டியே உலக மக்களெல்லாம்
குருவரங்கன் சீடர்கள் வழி
கட்டமில்லா வாழ்வு காண்பர்
கருணைமிக்க அரங்கமகான் ஆசி
11. ஆசிபெறுவதால் உலகமக்கள்
அனைவரும் ஞானவான்களாகி
வாசிவெல்லும் சூட்சுமங்களும்
வல்லமையும் கண்டு தேறுவர்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—